DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

| | | | |
|---|---|---|---|
| Calender | | | |
| Miscellaneous | | Case No | CC 108/18 |
| Priliminary Register | | | |
| Sessions | | | |
| | | Prosecution | PW 3 |
| Deposition of witness for | | Defence | |
| | | Court | |
| Name | | | Selvam |
| Father's Name | | | |
| Village | | | |
| Taluk | | | |
| Caste | | | |
| Calling | | | |
| Religion | | | |
| Age | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

01.04.2019 முதல் விசாரணை:

நான் தோப்பூரில் வசித:து வருகிறேன். லேத் பட்டறையில் வேலை செய்து வருகிறேன். எனக்கு கையெழுத்து போடத் தெரியும். படிக்கத் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் எதரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஒப்புதல் வாக்கமூலத்தில் உள்ள 1 வது கையெழுத:து அ.சா,ஆ,2. அத்தாட்சியில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ,3. 04.05.2018ம் தேதி முத:துக்கருப்பன் என்பவருடைய இரு சக்கர வாகனம் காணாமல் போயிருந்தது. இரண்டு நாட்கள் கழித்து நானும் முத்துக்கருப்பனிடம் வேலை பார்க்கும் அழகர் சாமியும் மேற்படி வண்டியை தேடுவதற்காக மதுரை பி.பி. குளம் அருகில் சென்று கொண்டிருந்தோம். அப்போது போலிசார் பி.பி.குளம் அருகில் இரு சக்கர வாகனத்தை சோதனை செயது கொண்டிருந்தார்கள். அப்போது காணாமல் போன முத்துக்கருப்பனின் வண்டி பற்றி

அங்கிருந்த போலிசாரிடம்சொன்னேன். வாகன என். டிஎன் 58 எப் 1397 எனறு சொன்னேன். அப்போது நீதிமன்றத்தில் ஆஜரான எதிரி பி. பி.குளத்தில் இருந்தார். அப்போது போலிசாரிடம் எதிரி தன்னை அழைத்து சென்றால் மேற்படி காணாமல் வண்டியை எடுத்து தருவதாக சொன்னார். மதுரையில் வானவராயர் மண்டகப்படி அருகில் வாகனத்தை எதிரி எடுத்து கொடுத்தார். போலிசார் என்னை இது சம்பந்தமாக விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

நான் 5 வருடங்களாக லேத் ஆபரேட்டராக வேலை செய்து வருகிறேன். முத:துக்கருப்பனின் கம்பெனியில் நான் தொழிலாளராக வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். எங்களுக்குள் நல்ல பழக்க வழக்கம் உள்ளது என்றால் சரிதான். இரு சக்கர வாகனம் 04.05.2018ம் தேதி காணாமல் போனது. வண்டி யார் திருடினார்கள் என்று எனக்குதெரியாது. நானும் முத்துக்கருப்பன், மற்றும் அழகர்சாமி ஆகியோர் காணாமல் போன வண்டியை தேடினோம். மதுரை பி.பி. குளத்தில் வண்டியை தேடிப் போய்க்கொண்டிருந்தோம். அப்போது போலிசார் வண்டியை நிறுத்தி சோதனை செய்தனர். வண்டி கிடைத்ததாக 06.05.2018ம் தேதி தகவல் தெரிந்தது. வண்டியை போலிசார் கண்டுபிடித்தஉடன் வாங்கவில்லை. நீதிமன்றத்தில் மனுசெய்து வாங்கினோம். வாகனம் வானவராயர் மண்டபத்தில் மண்டகப்படியில் இருந்தது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலம் என் முன்பாக காவல் ஆய்வாளர் எழுதினார். என் முன்பாக எதிரியை விசாரணை செய்தார்கள். எதிரி சொல்லச்சொல்ல ஆய்வாளர் கைப்பட எழுதினார். ஆய்வாளர் எழுதியதை நான் படித்துப் பார்த்தேன். கருப்பு மையால் எழுதினார். அதில் நான் கையெழுத்து செய்தேன். ஒப்புதல் வாக்கமூலம கணிணியில் அச்சடிக்கப்பட்டது அதில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். எதரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் முத்துக்கருப்பன் என் ஓனர் என்பதால் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால்சரியல்ல. நான் எழுதிய ஒப்புதல் வாக்கமூலத்தல் கையெழுத்து செய்யவில்லை என்றும் கையெழுத்து செய்திருந்தால் நீதிமன்றத்திற்கு எழுதிய ஒப்பதல் வாக்கமூலம் வந்திருக்கும் என்றும் பொய்யாக ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதால் கணிணியில் டைப் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. போலிசார்

கேட்டுக்கொண்டதால் காவல் நிலையம் சென்று பொய்யாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால்சரியல்ல.